முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1236

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

16.02.2023, வியாழக்கிழமை

1. அறமெனும் சக்திகொண்ட வள்ளலே
அன்னதான சக்திமிகு அண்ணலே
வரமென உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
வழங்குவேன் ஞான அறிவுரை ஆசி
2. ஆசிதனை சுபகிருது சால் திங்களில்
அரங்கனுக்கு இன்னும் பலம்கூட எடுத்துரைப்பேன்
வாசிவென்ற ஞானியர் படைகளோடு
வலம்வருகின்ற சூட்சும சக்திமிகு அரங்கனே
3. அரங்கன் உந்தனுக்கு ஆறுமுகன் யான்
ஆற்றலாக உள்ளிருந்து இயக்குகின்றேன்
மாற்றத்தை உன்னைக்கொண்டே இந்த கலியுகத்தில்
மாதர்மலோகமாக ஆக்கி இனிதே
4. இனிதே உலகோர்கள் வியக்கும் வண்ணம்
இணையிலா ஞானஆட்சி தந்தருள்வேன்
கனிவேலவன் என் நாமஜெபத்தை
கருணைகொண்டு உலகோர் பேருலகமெல்லாம்
5. பெருமைபட தர்மத்தோடு செய்யவேண்டி
பேராற்றல்பட சேவையாற்றும் அரங்கனே
அரங்கனே நீயே கலியின் சிறந்த ஞானி
அரங்கனே உன்தர்மமே கலியின் சிறந்த தர்மம்
6. வரங்களென உன்வழி வரும் தொண்டர்களே
வையகத்தை காக்கும் மகாசக்திகளாக மாறுவர்
மாறுதலை உலகமெங்கும் செய்யவேண்டி
மாதர்மத்தை பேராற்றல்பட செய்யும் அரங்கன் நீயே
7. பூதலத்தை காக்கும் மாதவசி
புண்ணியத்தை வளர்க்கும் மகா ஞானி
ஞானியே உன்வழி இந்த பேருலகம்
நம்பகமுற ஒன்றிணைந்து இயங்கும் காலம்
8. ஞானிகள் ஆட்சியாகவும்
ஞானப்பண்டிதன் என் தலைமைஏற்ற
ஞானஆட்சியாகவும் பேருலகம் கண்டுதேறும்
தேறவே உலகோர் அரங்கனை தேடி
9. துறையூர் மண்ணில் ஓங்காரக்குடிலுக்கு நாடி
இங்கனமே அரங்கனே யாவுமென எனைகாண ஓடி வந்தால்
வரமென அவர்கட்கெல்லாம் என்காட்சி
வல்லமைபட ஓங்காரக்குடிலில் கிட்டும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–